**சார்பு நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **திரு. C.B. வேதகிரி, B.Pharm, MS–IT (Aus), L.L.M.,**

சார்பு நீதிபதி, சீர்காழி

*******

2026–ம் ஆண்டு ஜுன் மாதம் 30–ம் நாள் செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண். 329/2024**

**CNR No.TNMY06–001677–2024**

1. ராமலிங்கம்
2. சசிகலா ...வாதிகள்

...எதிர்...

1. பழனியம்மாள்
2. சிந்துஜா
3. செல்வராணி
4. ருக்மணி
5. சார்பதிவாளர், சீர்காழி. .........பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 23.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. வி. விஜயலெட்சுமி அவர்கள் ஆஜராகியும், 5ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலணையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

**1.** வழக்கு சொத்தில் வாதிகளுக்கு கிடைக்க கூடிய 1/5 பாகம் வீதம் உண்டு என விளம்புகை செய்து நள இளப்பம் சரிகட்டி பாகம் பிரித்து கிடைக்க ஒரு முதல் நிலை தீர்ப்பாணை வாதிகளுக்கு வழங்கியும், முதல் நிலை தீர்ப்பாணை படி பாகத்தை பிரித்துக் கொள்ள வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய இறுதி நிலை தீர்ப்பாணைக்கு மனு தாக்கல் செய்ய அனுமதி வேண்டியும், ராஜேந்திரன் பெயரில் 21.11.1998 அன்று ரரேஜேந்திரன் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் செல்லாது அது வாதிகளை கட்டுப்படுத்ததாது என்று விளம்புகை பரிகாரம் வழங்கியும், முதல் எதிர்வாதி 2ம் எதிர்வாதிக்கு 20.11.2024 அன்று எழுதிக்கொடுத்த பாக விடுதலை ஆவணம் செல்லாது அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்ற விளம்புகை பரிகாரம் வழங்கியும், வழக்கு சொத்துக்களை எவ்வித பாராதீனம் அல்லது வில்லங்களுக்கு 1, 2 எதிர்வாதிகள் உட்படுத்தக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், வழக்கு செலவுத் தொகை கோரியும் இவ்வழக்கு வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>வாதியின் வழக்குரைச் சுருக்கம்:</u>**

வழக்கு சொத்தானது சீர்காழி தாலுக்கா பச்சைபெருமாநல்லூர் வட்டம் மத்தளமுடையான் கிராமத்தில் அமைந்துள்ளன. தங்கள் தந்தை காலஞ்சென்ற கோபால் ஏற்கனவே சொத்துக்களின் உரிமையாளராக இருந்த முத்துகுமாரசாமி பிள்ளை என்பவரிடம் 21-06-1988 அன்று ரூ.70,000/-க்கு கிரயம் பேசி ஒரு அக்ரிமெண்ட் ஏற்படுத்திக் கொண்டு அக்ரிமெண்ட் தேதியில் ரூ.40,000/- கோபால் முத்துக்குமாரசாமிக்கு கொடுத்துள்ளார். மேற்படி அக்ரிமெண்ட் தேதிக்கு பின்னர் 19.01.1989 அன்று ரூ.18,500/-யை முத்துக்குமாரசாமியிடம் கோபால் செலுத்தி உள்ளார். மேற்படி தொகை அக்ரிமெண்ட்டில் வரவு வைக்கப்பட்டுள்ளது. அதல்லாமல் பாக்கி தொகைகள் சீலிங் தவணை

தொகைகளாக கோபால் செலுத்தியுள்ளார். மேற்படி தொகையை பெற்றுக்கொண்ட முத்துக்குமாரசாமி வழக்கு சொத்தையும் மேற்படி கோபாலுக்கு கொடுத்து, 1989 முதல் கோபால் சொத்துக்களை சாகுபடி செய்து வந்துள்ளார். சொத்தில் ஏற்கனவே சாகுபடி செய்து வந்ததாக கூறி பச்சைப்பெருமாநல்லூர் சிங்காரம் என்பவரின் மகன் அன்பழகன், சிங்காரம் என்பவரின் மனைவி குணவதி ஆகியோர் மேற்படி கோபாலின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய முற்பட்டதால் மேற்படி கோபால் அன்பழகன் மற்றும் குணவதி மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.NO.114/1989 என்ற நம்பரில் வழக்கு தொடர்ந்து அதில் கோபாலுக்கு சாதகமாக விசாரணைக்கு பிறகு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கு எதிராக குணவதி என்பவர் கோபால் மீது உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி சீர்காழி மாவட்ட உரிமையியல் நிரந்தர உ நீதிமன்றத்தில் OS.NO.129/1989 என்ற நம்பரில் வழக்கு தொடர்ந்து, மேற்படி இரண்டு வழக்குகளும் நிலுவையில் இருந்தபோது கோபால் இறந்துவிட்ட நிலையில் இரண்டு வழக்குகளிலும் கோபாலின் வாரிசுகளாக அவர் மனைவி விசாலாட்சி மகன்கள் ராஜேந்திரன், ராமலிங்கம் (இந்த வழக்கின் 1ம் வாதி) ஆகியோரும் மகள்களான செல்வராணி (இந்த வழக்கின் 3ம் எதிர்வாதி) சசிகலா (இந்த வழக்கில் 2ம் வாதி) ருக்மணி ஆகியோரும் வாரிசுகளாக சேர்க்கப்பட்டு இரண்டு வழக்குகளும் சேர்த்து விசாரிக்கப்பட்டு இரண்டு வழக்குகளிலும் கோபால் வாரிசுகளுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளன. மேற்படி வழக்குகளின் தீர்ப்புகளை எதிர்த்து மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் AS.NO.52/2002 மற்றும் AS.NO.53/2002 ஆகிய நம்பர்களில் அன்பழகன் மற்றும் குணவதி மேல்முறையீடு செய்து, மேற்படி மேல்முறையீட்டு வழக்குகளும் சேர்த்து விசாரிக்கப்பட்டு அவற்றில் கோபாலுக்கு சாதகமாகவே தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கிடையில் கோபால் அவர்களின் முதல் மகனான

ராஜேந்திரன் கோபாலின் இதர வாரிசுகளுக்கு தெரியாமல் கடந்த 21-11-1998 தேதியன்று தனது பெயரில் கிரைய சாசனம் எழுதி பதிவு செய்துள்ளார். இந்த விவரம் கடந்த 2023 ஆம் ஆண்டு தான் வாதிகளுக்கு தெரிய வந்துள்ளது. இந்த நிலையில் கடந்த 29-10-2011 அன்று மேற்படி ராஜேந்திரனின் மனைவியான பழனியம்மாள் (முதல் பிரதிவாதி மகளான சிந்துஜா (2ம் பிரதிவாதி) மற்றும் தாரார் விசாலாட்சி ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துள்ளார். ராஜேந்திரன் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் பெயரளவில் குடும்பத்தில் மூத்த மகன் என்ற முறையில் ஏற்பட்டுள்ளதாகவே கருத வேண்டும். அந்த வகையில் வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கு தலா 1/5 வீதம் அடிப்படையில் 2/5 பாகமும் 1,2 எதிர்வாதிகளுக்கு 1/5 எனவே வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கு தலா 1/5 பாகம் கோரியும் ராஜேந்திரன் பாகமும் 3,4 எதிர்வாதிகளுக்கு தலா 1/5 பாகமும் கிடைக்க வேண்டியதாக உள்ளது. எனவே வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு தலா 1/5 பாகம் கோரியும், ராஜேந்திரன் பெயரில் 21-11-1998 அன்று ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் (சீர்காழி பதிவக ஆவண எண் 896/98) செல்லத்தக்கதல்ல என்றும், அது வாதிகளின் பாக உரிமையை கட்டுபடுத்தாது என்ற விளம்புகை பரிகாரமும் கோரியுள்ளனர். வழக்கு சொத்துக்களை முதல் வாதி தான் கோபாலுக்கு பிறகு சாகுபடி செய்து அரசு நிவாரணங்களை பெற்றும் பயிர் காப்பீடுகள் செய்து காப்பீட்டு தொகைகளை பெற்றும் அனுபவித்து வந்துள்ளார். கடந்த 2023ம் ஆண்டு முதல் வழக்கு சொத்துக்களை முதல் எதிர்வாதி சாகுபடி செய்து வருகிறார். அவர் வழக்கு சொத்துகளுக்கு பாகஸ்தர் என்ற முறையில் சாகுபடி செய்து வருவதால் அவருடைய அனுபவம் இதர பாகஸ்தர்களின் கூட்டு அனுபவமாகவே சட்டப்படி கருதப்படும். எனவே அதன் அடிப்படையில் கூட்டு அனுபவமுறையில் இந்த பாகபிரிவினை வழக்கை வாதிகள் தொடர்ந்துள்ளனர். வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கு உரிய பாகத்தை பிரித்து கொடுக்க வேண்டி வாதிகள் முதல் எதிர்வாதியை கடந்த 10-10-2024 தேதியில் கேட்டும் முதல்

பிரதிவாதி அதற்கு எந்தவித பதிலும் அளிக்கவில்லை. ஆனால் அவசரமாக வழக்கு சொத்தை முதல் எதிர்வாதி பழனியம்மாள் 20–11–2024 அன்று தன் மகளான 2ம் எதிர்வாதியான சிந்துஜாவுக்கு பாதிபாக உரிமைக்கு விடுதலை பத்திரம் எழுதி அதை சீர்காழி சார்பதிவகத்தில் 4931/2024 வது ஆவணமாக பதிவு செய்துள்ளார். எனவே ராஜேந்திரன் பெயரில் 21–11–1998ல் ஏற்பட்ட கிரய ஆவணமும் 20–11–2024ல் சிந்துஜா பெயரில் ஏற்பட்ட பாக விடுதலை ஆவணமும் செல்லாது என்று பரிகாரம் கோரி வாதிகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

3. <u>3, 4 ம் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணை மனுவின் சுருக்கம்:</u>

மேற்படி வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு வழங்க 3, 4 பிரதிவாதிகளுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று 3, 4 பிரதிவாதிகளின் தரப்பில் ஆட்சேபணை மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. <u>5ம் பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம் :</u>

மேற்படி வாதிகளின் வழக்கு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கதக்கதல்ல. 5ம் எதிர்வாதி அலுவலகத்தில் உரிய முறைப்படியான ஆவணம், பதிவு கட்டணம், மற்றும் முத்திரை கட்டணம் செலுத்தியதால், அதன் அடிப்படையில் தான் 5ம் எதிர்வாதி பதிவு செய்வதற்கு அதிகாரம் உள்ளதால் ராஜேந்திரன் பெயரில் 21.11.1998ல் ஏற்பட்ட கிரய ஆவணமும், 20.11.2024–ல் முதல் எதிர்வாதி 2ம் எதிர்வாதிக்கு பாகவிடுதலை ஆவணமும் முறையே சரிபார்த்து பதிவு செய்யப்பட்டுள்ளது. நேரடியாக பத்திரத்தினை ரத்து செய்யும் அதிகரம் 5ம் பிரதிவாதிக்கு கிடையாது. நீதிமன்ற உத்தரவினை அடிப்படையில் உரிய முத்திரை கட்டணம் செலுத்தினால் 5ம் எதிர்வாதி பதிவு செய்து கொடுப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை. 5ம் எதிர்வாதியை இந்த வழக்கில் தேவையற்ற தரப்பினராக சேர்துள்ளது சரியல்ல. 5ம் எதிர்வாதி அரசு

அதிகாரி என்பதால் அவருக்கு கொடுக்கவேண்டிய 80CPC–யின் கீழான அறிவிப்பு வாதிகள கொடுக்கப்படாமல் இவ்வழக்கு அவசர நிமிர்த்தம் எதற்காக தாக்கமல் செய்யப்படுகிறது என்ற விபரமும் வாதிகளால் தாக்கல் செய்யப்படவில்லை. எவ்வித அடிப்படை காரணமும் இன்றி கறைபடிந்த கரங்களுடன் வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடக் கோரியுள்ளார்.

5. <u>**இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழக்கண்ட எழுவினாக்கள்  தீர்வுக்காக வனையப்பட்டன.**</u>

<u>**எழுவினாக்கள்**</u>

1. வழக்கு சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் கூட்டுக்குடும்ப சொத்துக்களா?

2. தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு தலா 1/5 பாக வீதம் கிடைக்கக்கூடியதா?

3. தாவ சொத்துக்கள் குறித்து 21.11.1998 தேதியிட்ட கிரய பத்திரம் மற்றும் 20.11.2024 பாக விடுதலை ஆவணம் செல்லாது, வாதிகளை கட்டுப்படுத்தாது என்று வாதிகள் கேட்டுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கக்கூடியதா?

4. தாவா சொத்துக்களில் வாதிகள் கோரியுள்ளவாறு அவரவர் பாகம் முதல் நிலை தீர்ப்பாணை மூலம் கிடைக்கத்தக்கதா?

5. தாவா சொத்துக்களை பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் எவ்வித பாராதீனம் அல்லது வில்லங்களும்  செய்யக்கூடாது என்று கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதா?

6. வாதிகளுக்கு கிடைக்கத்தக்க வேறு பரிகாரங்கள் யாவை?

**6.** இவ்வழக்கை நிரூபிக்க வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக வா.சாஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரை சான்றாவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளன. 1, 2 பிரதிவாதிகள் அழைப்பாணை பெற்றுக்கொண்டும் நீதிமன்றம் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். 3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்பட்டவில்லை.

7. **எழுவினாக்கள் 1 முதல் 3 க்கான தீர்வு :**

வாதி தரப்பு வழக்கானது வழக்கு சொத்து சீர்காழி தாலுக்கா பச்சைபெருமாநல்லூர் வட்டம் மத்தளமுடையான் கிராமத்தில் உள்ளதாகவும், வாதிகளின் தந்தை காலஞ்சென்ற கோபால் என்பவர் முத்துகுமாரசாமி பிள்ளை என்பவரிடம் 21-06-1988 அன்று ரூ.70,000/-க்கு கிரயம் பேசி ஒரு அக்ரிமெண்ட் ஏற்படுத்திக் கொண்டு அக்ரிமெண்ட் தேதியில் ரூ.40,000/- கோபால் முத்துக்குமாரசாமிக்கு கொடுத்துள்ளதாகவும், மேற்படி அக்ரிமெண்ட் தேதிக்கு பின்னர் 19.01.1989 அன்று ரூ.18,500/-யை முத்துக்குமாரசாமியிடம் கோபால் செலுத்தியுள்ள மேற்படி தொகை அக்ரிமெண்ட்டில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும், அதனை இல்லாமல் பாக்கி தொகைகள் சீலிங் தவணை தொகைகளாக கோபால் செலுத்திய தொகையை பெற்றுக்கொண்ட முத்துக்குமாரசாமி வழக்கு சொத்தையும் மேற்படி கோபாலுக்கு கொடுத்து, 1989 முதல் கோபால் சொத்துக்களை சாகுபடி செய்து வந்ததாகவும், வழக்கு சொத்தில் ஏற்கனவே சாகுபடி செய்து வந்ததாக கூறி பச்சைப்பெருமாநல்லூர் சிங்காரம் என்பவரின் மகன் அன்பழகன், சிங்காரம் என்பவரின் மனைவி குணவதி ஆகியோர் மேற்படி கோபாலின் அனுபவத்திற்கு இடையூறு செய்ய முற்பட்டதால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் OS.NO.114/1989 என்ற நம்பரில் வழக்கு தொடர்ந்து அதில் கோபாலுக்கு சாதகமாக பரிகாரம் வழங்கப்பட்டு, அதனை தொடரந்து குணவதி என்பவர் கோபால் மீது உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி சீர்காழி மாவட்ட உரிமையியல் நிரந்தர உ நீதிமன்றத்தில் OS.NO.129/1989 என்ற நம்பரில் வழக்கு

தொடர்ந்து, மேற்படி இரண்டு வழக்குகளும் நிலுவையில் இருந்தபோது கோபால் இறந்துவிட்ட நிலையில் இரண்டு வழக்குகளிலும் கோபாலின் வாரிசுகளாக அவர் மனைவி விசாலாட்சி மகன்கள் ராஜேந்திரன், ராமலிங்கம் (இந்த வழக்கின் 1ம் வாதி) ஆகியோரும் மகள்களான செல்வராணி (இந்த வழக்கின் 3ம் எதிர்வாதி) சசிகலா (இந்த வழக்கில் 2ம் வாதி) ருக்மணி ஆகியோரும் வாரிசுகளாக சேர்க்கப்பட்டு இரண்டு வழக்குகளும் சேர்த்து விசாரிக்கப்பட்டு இரண்டு வழக்குகளிலும் கோபால் வாரிசுகளுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்றும், இத்தீர்ப்புகளை எதிர்த்து மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் AS.NO.52/2002 மற்றும் AS.NO.53/2002 ஆகிய நம்பர்களில் அன்பழகன் மற்றும் குணவதி மேல்முறையீடு செய்து, கோபாலுக்கு சாதகமாகவே தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்நிலையில் கோபால் அவர்களின் முதல் மகனான ராஜேந்திரன் கோபாலின் இதர வாரிசுகளுக்கு தெரியாமல் கடந்த 21-11-1998 தேதியன்று தனது பெயரில் கிரைய சாசனம் எழுதி பதிவு செய்துள்ளதாகவும், இந்த விவரம் கடந்த 2023 ஆம் ஆண்டு தான் வாதிகளுக்கு தெரிய வந்த நிலையில் கடந்த 29-10-2011 அன்று மேற்படி ராஜேந்திரனின் மனைவியான பழனியம்மாள் (முதல் பிரதிவாதி மகளான சிந்துஜா (2ம் பிரதிவாதி) மற்றும் தாரார் விசாலாட்சி ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்து விட்டதாகவும், ராஜேந்திரன் பெயரில் ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் பெயரளவில் குடும்பத்தில் மூத்த மகன் என்ற முறையில் ஏற்பட்டுள்ளதாகவே கருத வேண்டும் என்றும், அந்த வகையில் வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கு தலா 1/5 வீதம் அடிப்படையில் 2/5 பாகமும் 1,2 எதிர்வாதிகளுக்கு 1/5 எனவே வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கு தலா 1/5 பாகம் கோரியும் ராஜேந்திரன் பாகமும் 3,4 எதிர்வாதிகளுக்கு தலா 1/5 பாகமும் கிடைக்க வேண்டியதாக உள்ளதாகவும், வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு தலா 1/5 பாகம் கோரியும், ராஜேந்திரன் பெயரில் 21-11-1998 அன்று ஏற்பட்டுள்ள கிரைய ஆவணம் (சீர்காழி பதிவக

ஆவண எண் 896/98) செல்லத்தக்கதல்ல என்றும், அது வாதிகளின் பாக உரிமையை கட்டுபடுத்தாது என்ற விளம்புகை பரிகாரமும், கடந்த 2023ம் ஆண்டு முதல் வழக்கு சொத்துக்களை முதல் எதிர்வாதி வழக்கு சொத்துகளுக்கு பாகஸ்தர் என்ற முறையில் சாகுபடி செய்து வருவதால் அவருடைய அனுபவம் இதர பாகஸ்தர்களின் கூட்டு அனுபவமாகவே சட்டப்படி கருதப்பட வேண்டும் என்ற அடிப்படையில் கூட்டு அனுபவமுறையில் இந்த பாகபிரிவினை வழக்கை வாதிகள் தொடர்ந்துள்ளதாகவும், வழக்கு சொத்துகளில் வாதிகளுக்கு உரிய பாகத்தை பிரித்து கொடுக்க வேண்டி வாதிகள் முதல் எதிர்வாதியை கடந்த 10-10-2024 தேதியில் கேட்டும் முதல் பிரதிவாதி அதற்கு எந்தவித பதிலும் அளிக்காமல் அவசரமாக வழக்கு சொத்தை முதல் எதிர்வாதி பழனியம்மாள் 20-11-2024 அன்று தன் மகளான 2ம் எதிர்வாதியான சிந்துஜாவுக்கு பாதிபாக உரிமைக்கு விடுதலை பத்திரம் எழுதி அதை சீர்காழி சார்பதிவகத்தில் 4931/2024 வது ஆவணமாக பதிவு செய்துள்ளதாகவும், எனவே ராஜேந்திரன் பெயரில் 21-11-1998ல் ஏற்பட்ட கிரய ஆவணமும் 20-11-2024ல் சிந்துஜா பெயரில் ஏற்பட்ட பாக விடுதலை ஆவணமும் செல்லாது என்றும், விளம்புகை பரிகாரம் கோரியும் இவ்வழக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8. மேற்படி வழக்கில் 1, 2 பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணை கொடுக்கப்பட்டும் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். 3, 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணை மனுவில் வழக்கில் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு வழங்க எவ்வித ஆட்சேபணையும இல்லை என்றும் தெரிவித்துள்ளார்கள். வாதியின் வழக்கிற்கு 5ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 5ம் எதிர்வாதி அலுவலகத்தில் உரிய முறைப்படியான ஆவணம், பதிவு கட்டணம், மற்றும் முத்திரை கட்டணம் செலுத்தியதால், அதன் அடிப்படையில் தான் 5ம் எதிர்வாதி பதிவு செய்வதற்கு அதிகாரம் உள்ளதால் ராஜேந்திரன் பெயரில் 21.11.1998ல் ஏற்பட்ட கிரய

ஆவணமும், 20.11.2024–ல் முதல் எதிர்வாதி 2ம் எதிர்வாதிக்கு பாகவிடுதலை ஆவணமும் முறையே சரிபார்த்து பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும், நேரடியாக பத்திரத்தினை ரத்து செய்யும் அதிகரம் 5ம் பிரதிவாதிக்கு கிடையாது என்பதால், நீதிமன்ற உத்தரவினை அடிப்படையில் உரிய முத்திரை கட்டணம் செலுத்தினால் 5ம் எதிர்வாதி பதிவு செய்து கொடுப்பதில் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும், 5ம் எதிர்வாதியை இந்த வழக்கில் தேவையற்ற தரப்பினராக சேர்துள்ளதாகவும், 5ம் எதிர்வாதி அரசு அதிகாரி என்பதால் அவருக்கு கொடுக்கவேண்டிய 80CPC–யின் கீழான அறிவிப்பு வாதிகள கொடுக்கப்படாமல் இவ்வழக்கு அவசர நிமிர்த்தம் எதற்காக தாக்கல் செய்யப்படுகிறது என்ற விபரமும் வாதிகளால் தெரிவிக்கப்படவில்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்யக்கோரியுள்ளார்.

9. இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் 02.04.2001 தேதியிட்ட சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.114/1989ன் தீர்ப்பாணையின் சான்று நகல் வா.சா.ஆ.1ஆகவும், 19.11.2002 தேதியிட்ட மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண்.52/2002ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2ஆகவும், 19.11.2002 தேதியிட்ட மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண்.53/2002ன் தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3ஆகவும், 21.06.1988 தேதியிட்ட கிரைய அக்ரிமெண்ட் சான்று நகல் வா.சா.ஆ.4ஆகவும், 21.11.1988 தேதியிட்ட ராஜேந்திரன் பெயரிலான கிரைய சாசன நகல் வா.சா.ஆ.5ஆகவும், 05.11.2011 தேதியிட்ட ராஜேந்திரனின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.6 ஆகவும், 25.10.2012 தேதியிட்ட ராஜேந்திரனின் வாரிசு சான்று நகல் வா.சா.ஆ.7 ஆகவும், 20.11.2024 தேதியிட்ட 2ம் எதிரிவாதிக்கு முதல் எதிர்வாதி எழுதிக்கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரம் வா.சா.ஆ.8 ஆகவும், 17.11.1998 தேதியிட்ட முத்துகுமாரசாமி

பிள்ளை எழுதிக்கொடுத்த தானா செட்டில்மெண்ட் அசல் வா.சா.ஆ.9 ஆகவும், 23.07.2020 தேதியிட்ட வாதி செலுத்திய பயிர்காப்பீடு ரசீது அசல் வா.சா.ஆ.10 ஆகவும், 11.10.2022 தேதியிட்ட வாதி செலுத்திய பயிர்காப்பீடு ரசீது அசல் வா.சா.ஆ.11 ஆகவும், 02.11.2023 தேதியிட்ட வாதி செலுத்திய பயிர்காப்பீடு ரசீது அசல் வா.சா.ஆ.12 ஆகவும், 27.06.2020 தேதியிட்ட விசாலாட்சியின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.13 ஆகவும், 16.09.2021 தேதியிட்ட விசாலாட்சியின் வாரிசு சான்று கணினி நகல் வா.சா.ஆ.14 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

10. வழக்குரை சங்கதிகளை நிரூபிக்க இவ்வழக்கின் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தம்முடைய முதல் விசாரணை சாட்சியத்தில் இவ்வழக்கின் இரண்டாம் வாதி தனது சகோதரி என்றும், வழக்கு சொத்து ஆரம்பத்தில் முத்துக்குமாராசாமி பிள்ளை என்பவருக்கு சொந்தம் என்றும், அதன் பின்னர் வாதிகளின் தந்தை கோபால் என்பவர் வழக்கு சொத்துக்களின் உரிமையாளராக இருந்து முத்துக்குமாராசாமி பிள்ளை என்பவரிடம் 21.06.1988ம் தேதியன்று ரூ.70,000/-க்கு கிரயம் பேசி வா.சா.ஆ.4 கிரய பத்திரம் ஏற்படுத்திக்கொண்டு, கிரய தேதியில் ரூ.40,000/- கொடுத்துள்ளார் என்றும், மேற்படி அக்ரிமெண்ட் தேதிக்கு பின்னர் 19.01.1989 தேதியன்று கோபால் ரூ.18,500/- முத்துக்குமாரசாமியிடம் செலுத்தி, அக்ரிமெண்டில் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றும், இதனை தவிர பாக்கி தொகைகளை சீலிங் தவணை தொகையாக வாதியின் தந்தை கோபால் செலுத்தி, மேற்படி தொகையை பெற்றுக்கொண்ட முத்துக்குமாரசாமி வழக்கு சொத்தை வாதிகளின் தந்தை கோபாலுக்கு கொடுத்த பின்னர் 1989 முதல் கோபால் சொத்துக்களை சாகுபடி செய்து வந்துள்ளார். வழக்கு சொத்தில் சாகுபடி செய்து வந்ததாக கூறி பச்சைப்பெருமா நல்லூர் சிங்காரம் மகன் அன்பழகன், சிங்காரம் மனைவி குணவதி ஆகியோர் மேற்படி கோபாலின் அனுபவித்திற்கு இடையூறு செய்ததால்

கோபால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு எண்.114/1989 என்ற நம்பரில் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து வாதிகளின் தந்தை கோபாலுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளதால், இதனை எதிர்த்து அசல் வழக்கு எண்.129/1989 என்ற வழக்கை சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் குணவதி என்பவர் வாதிகளின் தந்தை கோபால் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் வாதிகளின் தந்தை கோபால் இறந்துவிடவே இரண்டு வழக்குகளிலும் கோபாலின் வாரிசுகளான கோபாலின் மனைவி விசாலாட்சி, மகன்கள் ராஜேந்திரன், இவ்வழக்கின் 1ம் வாதியான ராமலிங்கம், 2ம் வாதியான சசிகலா, இவ்வழக்கின் 3ம் பிரதிவாதி செல்வராணி, 4ம் வாதியான ருக்மணி ஆகியோரும் வாரிசுகளாக சேர்க்கப்பட்டு இரண்டு வழக்குகளிலும் கோபால் வாரிசுகளுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்றும், இத்தீர்ப்புகளை எதிர்த்து அன்பழகன் மற்றும் குணவதி மயிலாடுதுறை சார்பு நீதிமன்றத்தில் AS. No. 52/2002 மற்றும் AS. No.53/2002 ஆகிய இரு மேல்முறையீட்டு வழக்கு தாக்கல் செய்து, அதிலும், கோபாலின் வாரிசுகளான வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு சாதகமாக தீர்ப்பாகியுள்ளது என்றும், இந்நிலையில் வழக்கு சொத்தை கோபால் முதல் மகன் ராஜேந்திரன் கடந்த 21.11.1998ம் தேதியன்று தனது பெயரில் கிரய சாசனம் எழுதி பதிவு செய்த விவரம் வாதிகளுக்கு 2023ம் ஆண்டில் தெரியவந்த போது மேற்படி ராஜேந்திரன் கடந்த 29.11.2011 தேதியன்று தனது மனைவியான 1ம் பிரதிவாதி பழனியம்மாள், 2ம் பிரதிவாதி சிந்துஜா மற்றும் தனது தாயார் விசாலாட்சி ஆகியோரை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், இதனை தொடர்ந்து அவரது தாயார் விசாலட்சியும் 25.04.2020ம் தேதியன்று இறந்துவிட்டதால், வாதிகள் வழக்கு சொத்தில் தங்களுக்கு உரிய பாகத்தை பிரித்து கொடுக்க வேண்டி முதல் எதிர்வாதியை 10.10.2024ம் தேதியில் கேட்ட போது முதல் பிரதிவாதி அவசரமாக வழக்கு

சொத்தை தனது மகளான 2ம் பிரதிவாதியான சிந்துஜா பெயரில் பாதிபாக உரிமை விடுதலை பத்திரம் எழுதி அதை சார்பதிவக அலுவலகத்தில் பதிவு செய்துள்ளாதாகவும், ஆகையால் வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு தலா 5/1 பாகத்திற்கு உரிய வழக்கு சொத்தை பிரித்து தர முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரி வழக்கு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளார். மேலும் வா.சா.1ன் குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 1முதல் 4 பிரதிவாதிகள் தன் குடும்பத்தை சேர்ந்தவர்கள் என்றும், பாக பரிவினை மற்றும் இதர பாகத்திற்காக வழக்கு போட்டுள்ளதாகவும், இந்த வழக்கில் 5ம் பிரதிவாதிக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் 3, 4ம் பிரதிவாதிகள் வாதிகள் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிகளுக்கு வழங்குவதில் தங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

11. இவ்வழக்கில் இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் வழக்கு சொத்துக்கள் நஞ்சை புல எண்.56/1ல் எண்ணில் 1 ஏக்கர் 91 செண்ட் மற்றும் நஞ்சை புல எண்.53/3-3B-ல் 1 ஏக்கர் 42 செண்ட் ஆக கூடுதல் 3 ஏக்கர் 33 செண்ட் ஆகியவை கோபால் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதும், கோபாலின் வாரிசுகள் என்பது வா.சா.ஆ.14 கோபாலின் வாரிசு சான்று மூலமாக வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான ராஜேந்திரன் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் என்பதும் தெரியவருகிறது. வழக்கு சொத்துக்களுக்கு வாதியின் தந்தை பெயரில் உள்ள உரிமை ஆவணம் 21.06.1988 தேதியிட்ட வா.சா.ஆ.1 கிரய ஆவணம் மற்றும் வருவாய்த்துறை ஆவணங்கள் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் கோபாலின் மூத்த மகனான ராஜேந்திரன் என்பவரின் மனைவியான 1ம் பிரதிவாதி பழனியம்மாள் என்பதும், ராஜேந்திரனின் மகளான 2ம் பிரதிவாதி சிந்துஜா என்பதும் ராஜேந்திரனின்

வாரிசு சான்று வா.சா.ஆ.6ன் மூலமாக தெரியவருகிறது. கோபால் என்பவரின் வாரிசுகள் வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதியின் கணவரும், 2ம் பிரதிவாதியின் தந்தையுமான ராஜேந்திரன் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் என்பதும் சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 அசல் வழக்கு எண்.114/1989 மற்றும் மயிலாடுதுறை முதன்மை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மேல்முறையீட்டு எண்கள். 52/2002 மற்றும் 23/2002 முறையே வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3ன் மூலமாகவும் தெரியவருகிறது. மேலும் 1ம் வாதி கோபாலுக்கு பிறகு வழக்கு சொத்துக்களுக்கு வரி செலுத்தி அரசு நிவாரணங்களை பெற்றும் வழக்கு சொத்துக்களுக்கு பயிர் காப்பீடு செலுத்தி பயிர் காப்பீடு பெற்றவருவதாக பயிர் காப்பீட்டு ரசீதுகள் வா.சா.ஆ.10 முதல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் இவ்வழக்கில் கோபால் என்பவரின் மூத்த மகனான ராஜேந்திரன் என்பவர் இறந்துவிட்டதால் அவரது மனைவி பழனியம்மாள் 1ம் பிரதிவாதியாகவும், அவரது மகள் சிந்துஜா 2ம் பிரதிவாதியாகவும் ராஜேந்திரனின் வாரிசுகளாக சேர்க்கப்பட்டுள்ளார்கள். 1, 2 பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற அழைப்பாணை முறையாக கொடுக்கப்பட்டபோதும், 1, 2 பிரதிவாதிகளின் தரப்பில் வாதியின் வழக்குரையை மறுத்து எதிருரை தாக்கல் செய்ய முன்வராமல் ஆஜரின்மையால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள். வழக்கு சொத்துக்கள் வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பது வா.சா.ஆ.4ன் மூலம் தெரியவருகிறது. மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வழக்கு சொத்துக்கள் பாகப்பிரிவினைக்கு உட்பட்டவை என்று தீர்மானிக்கப்படுகிறது. மேலும் வழக்கு சொத்துக்களுக்கு வாதிகள் மற்றும் ராஜேந்திரன் மற்றும் 3, 4 பிரதிவாதிகள் வாரிசுகள் என்பதும், ராஜேந்திரன் இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளான ராஜேந்திரனின் மனைவி 1ம் பிரதிவாதி மற்றும் மகள் 2ம் பிரதிவாதி ஆகியோர்கள் வாரிசுகள் என்பதும் தெரியவருகிறது. ஆகையினால் கோபாலின்

மூத்த மகனான ராஜேந்திரனின் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் வா.சா.ஆ.5 பெயரளவில் குடும்பத்தில் மூத்த மகன் என்ற முறையில் ஏற்படுத்தப்பட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே கோபாலின் மூத்த மகன் ராஜேந்திரன் பெயரில் ஏற்பட்ட கிரய ஆவணம் வா.சா.ஆ.5, அதனை தொடர்ந்து ராஜேந்திரனின் வாரிசான 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதி பெயருக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.8 பாதி பாகப்பாத்திய விடுதலை பத்திரம் செல்லக்கூடியதல்ல என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றும் இந்நீதினறம் தீர்மானிக்கிறது. மேற்கண்ட சொத்துக்களில் வாதிகளின் தலா 1/5 பங்கு பாகம் குறித்து பாகப்பிரிவினைக்கான முதல் நிலை தீர்ப்பாணை வாதிகளுக்கு கிடைக்கக்கூடியது என்று தீர்மானித்து எழுவினாக்கள் 1 முதல் 3–க்கிற்கு தீர்வு காணப்படுகிறது.

12. **<u>எழுவினா 4 மற்றும் 5க்கான தீர்வு:</u>**

வழக்கு சொத்துக்கள் கோபாலுக்கு பாதிக்கப்பட்டதாக இருந்து அவருக்குப் பிறகு வாரிசு முறையில் ராஜேந்திரன் பெயருக்கு மட்டுமே வழக்கு சொத்துக்களுக்கு கிரய ஆவணம் ஏற்பட்டுள்ளது. கோபாலுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் வாதிகளுக்கு தலா 1/5 பங்கு பாக உரிமை உள்ளதால், வழக்கு பொறுத்து 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திக்கொண்ட வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.8 கிரய ஆவணங்கள் வாதிகளின் பாகத்தை கட்டுப்படுத்தக் கூடியவை இல்லை என்றும், வாதிகளின் பாகத்திற்கு கிடைக்கும் சொத்துக்கனை தகைமை நெறியின் கீழ் அடைந்து கொள்ளலாம் என்றும், அதில் பிரதிவாதிகள் எவ்வித பாராதீனம் செய்யக்கூடாது என்றும் தீர்மானித்து எழுவினாக்கள் 4 மற்றும் 5–க்கு தீர்வு காணப்படுகிறது.

**13. எழுவினா 6-க்கான தீர்வு:**

மேற்கண்ட எழுவினாக்களுக்கு காணப்பட்ட தீர்மானத்திலிருந்து வாதியின் வழக்கு அனுமதிக்க கூடியது என்று தீர்வு கண்டுள்ளதால் வாதிக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரம் எதுவும் இல்லை என்றும், வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளின் உறவு முறையை கருத்தில் கொண்டு அவரவர் செலவுத் தொகையை அவரவரே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து எழுவினா 6-க்கு தீர்வு காணப்படுகிறது.

14. **முடிவாக,** இவ்வழக்கு அனுமதிக்கப்பட்டு வழக்கு சொத்தை பொறுத்து வாதிகள் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றும், ராஜேந்திரன் பெயரில் 21.11.1998 தேதியிட்ட கிரய ஆவணமும், முதல் எதிரிவாதி 2ம் எதிர்வாதிக்கு 20.11.2024ம் தேதியன்று எழுதிக் கொடுத்த பாக விடுதலை ஆவணமும் செல்லாது, அது வாதிகளை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்றும், வழக்கு சொத்துக்களில் வாதிகளுக்கு தலா 1/5 பங்கு பாகம் உள்ளது என்று விளம்புகை செய்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து விரிவாக்கம் செய்து கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்/-... **C.B. வேதகிரி,)**

சார்பு நீதிபதி,

சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

**<u>வாதி தரப்பு சாட்சிகள்</u>**

வா.சா.1 திரு. ராமலிங்கம் ( வாதி )

**<u>வாதிதரப்பு சான்றாவணங்கள்</u>**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 02.04.2001 | சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு எண்.114/1989 தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 19.11.2002 | மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண்.52/2002 தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 19.11.2002 | மயிலாடுதுறை முதன்மை சார்பு நீதிமன்றத்தின் மேல்முறையீட்டு வழக்கு எண்.53/2002 தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.4 | 21.06.1988 | கோபால் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.5 | 21.11.1988 | ராஜேந்திரன் பெயரிலான கிரய சாசன சான்று நகல் |
| வா.சா.ஆ.6 | 05.11.2011 | ராஜேந்திரனின் இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.7 | 25.01.2012 | ராஜேந்திரனின் வாரிசு சான்று |
| வா.சா.ஆ.8 | 20.11.2024 | 2ம் எதிர்வாதிக்கு முதல் எதிர்வாதி எழுதிக் கொடுத்த பாகப்பாத்திய விடுதலை பத்திரம் |
| வா.சா.ஆ.9 | 17.11.1998 | முத்துக்குமாராமி பிள்ளை எழுதிக்கொடுத்த தானா செட்டில்மெண்ட் ஆவணம் |
| வா.சா.ஆ.10 | 23.07.2020 | வாதி செலுத்திய பயிர் காப்பீடு |
| வா.சா.ஆ.11 | 11.10.2022 | வாதி செலுத்திய பயிர் காப்பீடு |
| வா.சா.ஆ.12 | 02.11.2023 | வாதி செலுத்திய பயிர் காப்பீடு |
| வா.சா.ஆ.13 | 27.06.2020 | விசாலாட்சி இறப்பு சான்றிதழ் அசல் |
| வா.சா.ஆ.14 | 16.09.2021 | விசாலாட்சி வாரிசு சான்றின் கணினி நகல் |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் –இல்லை</u>**

**<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் – இல்லை.</u>**

(ஒம்/–... **C.B. வேதகிரி,)**

சார்பு நீதிபதி, சீர்காழி.

நேரிய / வரைவு தீர்ப்புரை

அசல் வழக்கு எண்.329/2024

நாள் – 30.06.2026